ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2015/57 - 2017 අප්‍රේල් මස 21 වැනි සිකුරාදා - 2017.04.21

2015/57 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: MOR/LAN/01/F1/186.
காணி அமைச்சின் இல.:LD/05/2009/VE/154.

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொரட் டுவை பிரதேச செயலகப் பிரிவின் அங்குலானை (மொரட்டுவை மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தி லுள்ள நில அளவை தலைமையதிபதியால் தயாரிக் கப்பட்ட 520212/05/02 என்ற இலக்கமும் 2016.09.30 ஆம் திகதியிடப்பட்டதுமான காணி அளவீட்டு வரைபடத்தின் (Cadastre ) காணித்துண்டு இலக்கம் 513 மற்றும் 514 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் 0.0347 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணிப் பகுதியாகும்.

**துண்டு இலக்கம் 513**

காணியின் பெயர்: இல்லை; விபரம்: வீதி; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அங்குலானை சமுத்திராசன்ன வீதி இலக்கம் 334 இல் வதியும் மாதங்கஹவத்த கீர்த்திபால சில்வா; விஸ்தீரணம்: 0.0122 ஹெக்டயார்.

**துண்டு இலக்கம் 514**

காணியின் பெயர்: மாதங்கஹவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அங்குலானை சமுத்திரா சன்ன வீதி இலக்கம் 334 இல் வதியும் வெலிகமகே கீர்த்திபால சில்வா; விஸ்தீரணம்: 0.0225 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

எச். ஆர். எச். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மொரட்டுவை.

பிரதேச செயலகம்,
மொரட்டுவை,
2017, ஏப்பிறல் 19.

5 - 174

1A - G 25451 - 22 (2017/ 04)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*